கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

REA.No. 02/2024

in

REP.No. 36/2013 (PW1)

மனுதாரர் தரப்பு சாட்சி 1ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. V.வாஞ்சிநாதன், இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. S.R.வெங்கடாச்சலம் | சமயம் | : | -- |
| த/பெ. | : | ராமசாமி கவுண்டர் | ஊர் | : | சௌதாபுரம் கிராமம் |
| வயது | : | 59 | தாலூக்கா | : | குமாரபாளையம் |
| தேதி | : | 11.03.2025 | தொழில் | : | விவசாயம் |

முதல் விசாரணை :-

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், சௌதாபுரம் கிராமம், மக்கிரிபாளையம், சுள்ளிக்காடு, க.எண் 3/19 என்ற விலாசத்தில் வசித்து வரும் ராமசாமி கவுண்டர் மகன் சுமார் 59 வயதுள்ள S.R.வெங்கடாச்சலம் ஆகிய நான் சத்திய பிரமாணத்தின்பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

இன்று நான் தாக்கல் செய்திருக்கும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாணபத்திரிக்கை எனக்கு படித்துக்காட்டப்பட்டது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| S.No. | Date | Particulars of documents | Court documents |
|---|---|---|---|
| 1. | 13.03.1998 | 1,2 மனுதாரர்கள் மற்றும் முருகேசன் மகன் வெங்கடாச்சலம் பெயரிலான கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | ம.சா.ஆ.1 |
| 2. | 13.05.2008 | முருகேசன் மகன் வெங்கடாச்சலத்தின் இறப்பு சான்றிதழ் – ஜெராக்ஸ் | ம.சா.ஆ.2 |
| 3. | 17.06.2008 | முருகேசன் மகன் வெங்கடாச்சலத்தின் வாரிசு சான்றிதழ் – ஜெராக்ஸ் | ம.சா.ஆ.3 |
| 4. | 29.07.2024 | எலந்தகுட்டை கிராம சர்வே எண் 184/1C க்கான பட்டா எண் 10553 – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.4 |
| 5. | 05.08.2024 | எலந்தகுட்டை கிராம சர்வே எண் 184க்கான புலவரைபடம் – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.5 |

| | | | |
|---|---|---|---|
| 6. | 05.08.2024 | எலந்தகுட்டை கிராம சர்வே எண் 184/1C க்கான புலவரைபடம் – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.6 |
| 7. | 09.08.2024 | எலந்தகுட்டை கிராம சர்வே எண் 184/4B2 க்கான புலவரைபடம் – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.7 |
| 8 | 09.08.2024 | எலந்தகுட்டை கிராம சர்வே எண் 184/1D2 க்கான புலவரைபடம் – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.8 |
| 9 | 29.07.2024 | வில்லங்க சான்றிதழ் – கணினி பதிவிறக்க நகல் | ம.சா.ஆ.9 |
| 10 | -- | கிராம நிர்வாக அலுவலரின் சான்று – அசல் | ம.சா.ஆ.10 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்துகொண்டு, நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவினை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.